# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF DISTRICT MUNSIF, SHENCOTTAH

O.S.No.78/2023

Deposition of witness for PW2

| | | |
|---|---|---|
| Name | : | ராமையா |
| Father's Name | : | வெள்ளையன் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 81 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 08.04.2026.

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சியாவேன். என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை எனது வழக்கறிஞர் படித்துப்பார்த்து உண்மையென உறுதி கூறி கைரேகை செய்துள்ளேன்.

<u>குறுக்கு விசாரணை: (3–6 பிரதிவாதிகள் தரப்பில்)</u>

1. நான் சின்ன நாட்டாமை என்றால் யார் பெரிய நாட்டாமை பிற உறுப்பினர்கள் யார் என்று எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்ல வில்லை என்றால் சரிதான்.

2. சின்ன நாட்டாமையின் பதவி காலம் எத்தனை காலம் என்றால் 5 ஆண்டுகள். நான் எந்த காலகட்டத்தில் சின்ன நாட்டாமையாக இருந்தேன் என்று காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரிதான். பொதுவாக நாட்டாமைகள் யார் என்று எங்கள் சமுதாயத்தில் பதிவேடுகள் வைத்திருப்பார்கள் என்றால் சரிதான். குட்டிச்சாமியின் மனைவி மாரியம்மாள் எந்த ஊரை சார்ந்தவர் என்றால் ஆயிரப்பேரி. அவர் ஆயிரபேரில் தான் இறந்தார். அவரின் இறுதி சடங்கை குட்டிச்சாமி தான் செய்தார் என்றால் சரிதான். நல்லையாவிற்கும் எனக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். மாரியம்மா நல்லையாவின் வீட்டில் குடியிருந்து வந்தார் என்று, எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நல்லையா தற்போது அவரின் மனைவி மற்றும் மக்களோடு தற்போது வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலம் பத்தியம் 4ல் வரி 3– 5 வரை உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. குட்டிசாமி மாரியம்மாளை நீதிமன்றம் மூலம் விவகாரத்து செய்ய வில்லை என்றால் சரிதான். குட்டிசாமி மத்திய அரசு நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். எங்கள் சமுதாய வழக்கப்படி தீர்வு எந்த நாள் எந்த தேதியில் எவ்வளவு தொகை தீர்வையாக குட்டிச்சாமி கொடுத்தார் என்று, எனக்கு நேரடியாக கொடுதார் என்றால் எனக்கு தெரியாது. சமுதாய ரீதியான விவாகரத்து சட்டப்படி செல்லாது என்பது எனக்கு தெரியாதா என்றால் தெரியும். இவ்வாறு எத்தனை பேருக்கு விவாகரத்து வழங்கியுள்ளோம் என்றால் இது மட்டுமே வழங்கியுள்ளோம். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு விபரம் யார் கூறினார்கள் என்றால் வாதிகள் தான் கூறினார்கள். எந்த தேதியில் யார் முன்னிலையில் வசந்தாவும் குட்டிசாமி திருமணம் செய்து கொண்டார்கள் என்று முதல் விசாரணையில் நான் சொல்ல வில்லை என்றால் சரிதான். குட்டிசாமிக்கும் வசந்தாவிற்கும் குழந்தைகள் இல்லை

என்றால் சரிதான். மேற்படி நபர்களின் வீட்டில் தங்கி பள்ளிகூடம் யாரும் செல்லவில்லை என்றால் சரிதான். எனவே நான் மீனாவை பார்த்ததில்லை என்றால் சரிதான். குட்டிச்சாமியும் மாரியம்மாளும் விவகாரத்து எதுவும் செய்யவில்லை எனவே தான் குட்டிச்சாமி மாரியம்மாளின் ஈமச்சடங்குகளை செய்தார் என்றால் சரிதான். குட்டிச்சாமிக்கும் வசந்தாவிற்கும் திருமணத்தை மீறிய உறவு இருந்ததால் தான் மாரியம்மாள் பிரிந்து வாழ்ந்து வந்ததார் என்றால் சரிதான். நான் வாதிக்காக பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- K.N. குரு**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**